உ

சிவமயம்

யாழ்ப்பாணம் — தாவடி வாசரும்
உயர் சைவப் பெருங்குலத்தினரும்
நியாயவாதியுமான காலஞ்சென்ற

உயர்திரு.

# வைத்திலிங்கம் தாமோதரம்பிள்ளை

(இளைப்பாறிய பிரதம மொழிபெயர்ப்பாளர், நீதிபரிபாலன இலாகா)

அவர்களது பிரிவு குறித்த


# நினைவிதழ்

பரிதாபி௵ ஆவணிமீ

1972

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. வைத்திலிங்கம் தாமோதரம்பிள்ளை அவர்கள்

தோற்றம் :
22 – 2 – 1914

மறைவு :
6 – 8 – 1972

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

யாழ்ப்பாணம் – தாவடி வாசரும்

உயர் சைவப் பெருங்குலத்தினரும்

நியாயவாதியுமான காலஞ்சென்ற

உயர்திரு.

# வைத்திலிங்கம் தாமோதரம்பிள்ளை

(இளைப்பாறிய பிரதம மொழிபெயர்ப்பாளர், நீதிபரிபாலன இலாகா)

அவர்களது பிரிவு குறித்த

# நினைவிதழ்

பரிதாபி௵ ஆவணிமீ

1 9 7 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## யாழ்ப்பாணம் – தாவடி வாசரும்,
## உயர் சைவப் பெருங்குலத்தினரும்
## நியாயவாதியுமான காலஞ்சென்ற
# உயர்திரு. வைத்திலிங்கம் தாமோதரம்பிள்ளை

(இலங்கைப்பாறிய பிரதம மொழிபெயர்ப்பாளர், நீதிபரிபாலன இலாகா)

அவர்களது பிரிவு குறித்த

# *நினைவிதழ்*

### மக்கள், தாவடி அம்பலவாண வேதவிநாயகரை வேண்டல்

தந்தையைச் சுற்றித் தனியொரு மாம்பழம் பெற்றுலகந்
தந்தைக் கிணையெனக் காட்டிய ஐங்கர தாவடியிற்
சிந்தை யுவந்து பணிவார்க் கருளுவை யென்றறிவோம்
தந்தையர் நின்னடி தேடிவந் தாரவர்ப் பேணுதியே.

சேவடி யாகிய நின்னடி கண்டுதஞ் சிந்தைமகிழ்ந்
தேயடி தான்தொழ ஓடி வருமடி யார்களெல்லாந்
தாவடி யாகிட வேவரத் தாவடி யிங்கமர்ந்தாய்
தாவடிப் பேறென வந்திடு தந்தையைத் தாங்குதியே.

சோதித் தருள்தரு தாதையை வைத்திய நாதனென்பார்
பேதித் திடுபவ ளுன்னருந் தாயெனப் பேசுகின்றார்
நாதத் தனிமுதல் தாவடி யிங்குறு மைங்கரனே
வேதப் பெருமுதல் தந்தையை ஏற்று அருளுதியே.

வள்ளியை வேட்டு மகிழ்ந்திட எண்ணி மயிலிவர்ந்து
துள்ளி நடந்தும் அவள்மன ஒப்புதல் காணலின்றி
உள்ளம் வருந்த உடனே கரிவடி வாகிவந்தாய்
உள்ளம் விரும்பி வணங்கிய தந்தையை ஏற்றருளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக வடிவினிற் கங்கை புவியிற் படரவைத்தோய்
தேகம் புவிக்கென ஆக்கி நினதடி தேடிவந்தார்
வேகம் கதிக்க வணங்கு மடியரைக் காப்பவனே
தாகம் மிகுந்தவர் தந்தைக் கருளுதி தாவடியே.

குட்டிப் பணிந்துனைக் கும்பிட்ட போதெது வேண்டுகினும்
எட்டி நடந்ததில் ஏற்றவை ஈந்து புரந்தவனே
மட்டில் கருணையை வேண்டிய தந்தை நினையடைந்தார்
தொட்டுன் கரத்தணைத் தாள்குதி தாவடித் தூமணியே.

வேதப் பெருமுத லென்றே வணங்கு மடியவர்க்குப்
போதும் எனவருள் தாவடி மேவி யருள்சுரக்கும்
வேத விநாயக தந்தையர் பூமியை நீக்கிவந்தார்
போதிற் பொலிபத வாழ்வை யளித்தருள் வைக்குதியே.

வெம்பிப் புலையுடல் வாழ்வை வெறுத்து நினதடிக்கு
நம்பிக்கை வைத்து நிதமும் வணங்கி நடந்ததந்தை
தும்பிக்கை தாவென வந்தார் அவர்க்கு அருள்புரிக
தும்பிக்கை கொண்டவ தாவடி வேத விநாயகனே.

பாதகஞ் செய்திடு பாவியர் தங்கள் புலையறிவைப்
பேதகஞ் செய்து பொலிவான நின்னடி காட்டுவையாம்
மோதகம் ஏந்தி மகிழும் பிரானே எங்கள்தந்தை
பாதமங் குற்றிட வந்தா ரருளுதி யெம்மிறையே.

யார்கதை யும்பிழை யென்றவை நீக்கியு மெங்கள்பிள்ளை
யார்கதை யொன்றையே கேட்பதென் றென்றுமுன் வாயிலிலே
மார்பதைத் தோய்த்து மகிழ்ந்தவர் தந்தை மருவிவந்தார்
பேர்பத மீந்தவர்க் கின்னருள் தாவடிச் செம்பொருளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலஞ் சென்ற

# உயர்திரு. வைத்திலிங்கம் தாமோதரம்பிள்ளை

அவர்கள்மேற் பாடப்பட்ட

# கையறம்

திதி வெண்பா

ஆண்டுபரி தாபிமதி ஆடி யபரபக்கத்
தீண்டு துவாதசியே எந்நலமும்—பூண்டமகன்
தேசார்தா மோதரனுர் சீரார் கயிலைமலை
ஈசன் பதஞ்சார் தினம்.

**அகவற்பா**

நித்திலம் கரைதனில் எற்றிடச் சிறுமியர்
கத்திநின் றெடுத்தெழில் ஆரமே செய்திடும்
சீரது பரவிய திரைகடல் நடுவினில்
பேரது பிறங்கிடப் பொலியுநற் பதியதாம்
ஈழநன் ஞட்டினின் சிரமெனப் பேசிடும்
யாழ்நிலத் தொருபதி நற்றவ மேலவர்
சோதிடர் மருத்துவர் கமவினைத் திறலினர்
தீதிலாக் கலைதரும் சட்டம்பி மார்களும்
அரசினர் சேவைசெய் அழகினர் எனப்பல
பெருநெறி பேணுவோர் பெருகிடுந் தாவடி
வைத்திய லிங்கனுர் வல்லவன் பார்வதிக்
கயற்கணுள் தன்னுடன் கவினமை இல்லறம்
செய்திட வந்திவண் தோன்றிய தவமகன்.
மெய்நெறி பயிலுயர் கந்தையா, ஓய்வுற்ற
மாசிலா ஸ்டேசன் மாஸ்டர்மார்க் கண்டுவும்
தேசினுள் ராசம்மா கணபதிப் பிள்ளையொடு
திருவளர் அன்பினுன் மாரிமுத் திவர்களின்
பெருகிய அன்புடைச் சோதரன் முறையினுன்.
பெரும்பதி நுணுவில் வைத்திய லிங்கமாம்
அருந்தவன் சிவபாக் கியத்தினை மணந்துயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவநெறி படர்ந்திட வந்தவ தரித்தவள்
தவபா லாம்பிகை தேவிதன் கணவன்
யாழ்பெரி யாசுப் பத்திரி தன்னிலே
சூழ்பணி டக்டராய்ப் புரியுபத் மாசனி
மாதுபத் மினியுடன் பரிமளா இளமகள்
ஓதுநற் கலைபயில் பிரபா கரனெனும்
இந்து-மாணவன் இவரெலாம் தன்னுடைச்
சிந்தையார் மக்களாய்க் கொண்டசீர்த் தந்தையார்
பரந்தன் கமநலச் சேவையிலா காவில்
நிரந்தரப் பணிபுரி துரைசிங்க மாதவன்
தனதரும் அன்புடை மாமனாய் மிளிர்ந்தவன்
எனதொரே பேரனே என்று புகழ்ந்திடத்
தளிர்நடை தருதவப் பிரதீபன் என்றிடும்
எழின்மகன் தனதுயர் பேரனுர் முறையினன்
வஞ்சகம் சூது வாதுவே தனைகளே
தஞ்சமாய்க் கொள்புவி வாழ்வினை வெறுத்தவன்
கட்டிய மனைவிசீர் மக்கள் அயலொடு
சட்டநூல் அறிந்திடு நண்பர்கள் உறவினர்
சிந்தை கலங்கிடச் சிலபொழு திடையில்
அந்தவிண் ணரன்பதம் அடைந்தன னையோ
ஏதினிச் செய்வமென் றேங்கிக் கலங்கிப்
பூதலம் சோகம் பூண்டு படர்ந்ததே.

### மனைவி புலம்பல்

ஊறிவரு நதியெனப் பாய்ந்திடும் அன்பினல்
வளர்ந்ததை உன்னியழவோ
உள்ளந் திறந்தகுணம் ஒருசிறிது கபடமும்
உங்களிடம் கண்டதில்லை
தேறரிய கவலையொடு தேம்பிடும் மக்களை
நோக்கியே என்றுமழவோ
சினந்துஒரு மொழிபேசாச் சிறப்பினை எண்ணியே
தினமுந்நான் ஏங்கியழவோ
நூறுயுக மாயினும் என்னைநீர் நீங்கிடா
திருப்பிரென் றெண்ணிநின்றேன்
நேயரே ஒருநொடியி லோடினீர் நொந்துநான்
நினைவழிந் தேங்கினேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறவழி தெரிகிலா அபலையாய் ஆக்கினீர்
ஐயனே விதியுமிதுவோ
அனுதினம் கையெடுத் திட்டதா வடியினேய்
அப்பனே என்செய்வனே.

## மக்கள் புலம்பல்

ஓயாத கண்ணீரைச் சிந்திச் சிந்தி
உருகுகிறோம் உம்பிரிவால் என்றும் கண்ணுற்
பாயாத நீரெல்லாம் பாய்ந்தே வற்றிப்
புலம்புநிலை தளர்ந்தனமே எங்கள் வாழ்வைக்
காயாகக் கண்டவரே கனியாகக் கண்டு
களிக்காமுன் ஓடியதேன் இனிமே லிங்கே
நாயாக அலைவதுதான் கடவுள் விட்ட
நடுவழியோ ஐயாவே என்செய் வோமே.

பாயுதே கண்ணீ ராறு பதைக்குதே நெஞ்சம் ஐயா
சாயுதே உடலம் சோர்ந்து தளருதே நீயில் லாமல்
காயுதே கும்பி யையோ கலங்குதே மனமும் கண்ணும்
ஓயுமோ துயரம் இங்கு ஒழியுமோ இல்லை ஐயோ.

## மருமகன் புலம்பல்

மடையது உடைத்துப் பாயும் மாவலி ஆறே போல
இடைவிடா தொழுகுங் கண்ணீ ரோடுநான் புலம்ப விட்டுச்
சுடலையைச் சேர்ந்தீ ரையோ துடிக்கிறேன் பதைக்கி றேன்நான்
கொடுமையிங் கிதனை யேனே கடவுளர் தந்தார் மாமா.

## பேரன் புலம்பல்

தூக்கி மடிகிடத்தித் தூங்கடாகண் ணேயென்று
பாக்களிலே தாலாட்டுப் பாடினையே—வீக்கமெடுத்
திங்கழுது துன்பமுறும் எந்தனைநீ ரெண்ணுது
எங்ககன்றீ ரென்செய்கு வேன்.

வந்தா லருகிருத்தி வாயினிக்க நெஞ்சினிக்கத்
தந்தா யுபசாரம் நீமறைந்து—வெந்தாய்
பெருநெருப்பி லென்றதனைக் கேட்டே மனது
உருகி அழிந்தே னுயிர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது

காலாடு பந்தொடு கைப்பந் திவனுக்கு வாய்த்தகலை
நாலாறு கீர்த்தனம் கேளாத நாளில்லை என்றிருப்பான்
மேலான பண்பினன் தாமோ தரம்பிள்ளை தான்பிரிய
நாலூரு மேங்கிக் கலங்கி யழுதனர் நீள்துயரே.

காலையிற் சூரியன் தோற்றுமுன் வீட்டிற் பலர்வருவர்
மாலை வரைக்கு மவர்கள் பிணக்கு வழக்குகளைச்
சீல னறிந்து சரிசெய்வர் கோட்டில் உரைபொழிந்து
சால வுகந்த முடிவே யடைந்தனன் சென்றதெங்கே.

கற்றவன் நற்றமிழ்ப் பண்டிதன் ஊரவர் தான்மதிக்கப்
பெற்றவன் தீதறி யாதவன் நல்லறம் தான்புரிந்த
நற்றவன் போய்விட நாடு நலிந்தது நாங்களெலாம்
பெற்றனம் தீர்வரும் வேதனை யென்றன ரூரவரே.

காலையி லேபகல் வேளையி லேயிர வாகையிலே
கோலவி நாயகர் தாவடி யண்ணலை நீறணிந்து
சீலன் வணங்கினன் சிந்தைபொய் தீர்ந்து சிறந்திருந்தான்
கால மழிந்திடக் காலன்கைப் பட்டனன் செய்வதென்னே.

கையது நீட்டிற் கடவுளுக் கும்மிவன் ஈதற்கன்றிச்
செய்யெனக் கேது முதவிக ளென்றிவன் கேட்டறியான்
வையக வாழ்விது பொய்யெனக் கண்டு கடவுளரின்
செய்யபொற் பாதம் விரும்பினன் சென்றனன் பேரிழப்பே.

தேனு யினிக்கத் தினமுறை யாடல் புரிபவனுக்
கேனோ குறைவய திந்த இறையவன் வைத்தனனென்
றூனுப் படித்தறி யாததும் கேட்டிடப் பாட்டெழுதும்
பேனுத் தடைப்பட இத்துடன் விட்டனன் மன்னியுமே.

## தேற்றம்

சாந்தத் திருவுருவத் தாமோ தரமுதல்வன்
மாய்ந்தா ருலகியல்பு மாறுவதோ—தாந்தாமே
செய்பணியைச் செய்வீர் மனதில் உறுநிறைவோ
டெய்தீ ரமைதி யினி.

ஆக்கம் :

கரவை - '**மன்னவன்**'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னுகம்-எ799-8/1972

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org